# DEPOSITION OF WITNESS
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**XXIII Additional Sessions Court, City Civil Court, Chennai 104**

**Sessions Case No : 39/2021**

**Prosecution Witness : PW.18**

**Name : Muthamilselvan**

**Father Name : Dharmalingam**
**Village :**

**Taluk :**

**Caste :**

**Calling :**

**Religion :**

**Age :**

***( Accused along with their counsel and Public Prosecutor present)***

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the17th day of April 2023.**

---

<u>முதல் விசாரணை</u>

நான் திருச்சி சோமரசன்பேட்டை, எண்.3/29–வாசன் சிட்டி என்ற விலாசத்தில் வசிக்கிறேன். எல்.ஐ.சி ஏஜெண்டாக திருச்சி ஒத்தக்கடையில் பணிபுரிகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. கடந்த 2018ம் ஆண்டு ஒரு நாள் என்னை திருச்சி சோமரசன்பேட்டை போலீசார் கூப்பிட்டு சுதா என்ற நபரை தெரியுமா என்று கேட்டார்கள். அவரை தெரியாது என சொன்னேன். அதன் பின்னர் போலீசார் என்னிடம் அதே போன்று ஒரு கடிதம் எழுதிக்கொடுக்குமாறு கேட்டுக் கொண்டதின் பேரில் அவ்வாறு எழுதி கொடுத்தேன். ஆஜர் 6வது எதிரியை நான் இதுவரை பார்த்ததில்லை. மேற்படி 6வது எதிரி எனது முன்பாக சோமரசன்பேட்டை போலீசாரிடம் எவ்வித வாக்குமூலமும் கொடுக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம்

மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது போடப்பட்டுள்ள இரண்டு கையொப்பங்கள் என்னுடையது அல்ல. ஆஜர் சாட்சி சங்கர் என்பவரை எனக்கு தெரியும். அவர் என்னுடன் காவல் நிலையத்திற்கு வந்து கையொப்பம் எதுவும் போடவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை அனுமதி வழங்கப்பட்டது)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

கடந்த 09.06.2018 அன்று ஆஜர் எதிரி சுதா என்பவர் திருச்சி மாவட்டம் சோமரசன்பேட்டை காவல் நிலையத்தில் எனது முன்னிலையில் போலீசாரிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றாலும் அதில் நான் சாட்சி கையொப்பம் போட்டேன் என்றாலும் சரியல்ல. பின்னர் எதிரி சுதா என்பவர் அவரது வீடு அமைந்துள்ள சோமரசன்பேட்டை வாசன் சிட்டி, 7வது குறுக்கு தெருவில் போலீசாரிடம் ஆஜர் படுத்திய Hero Pleasure, இரு சக்கர வாகனம் மற்றும் Samsung Galaxy Mobile with Two Simcards ஆகியவற்றை மகஜரில் கைப்பற்றினார்கள் என்றாலும், அதற்கான கைப்பற்றுதல் மகஜரில் நான் கையொப்பம் போட்டேன் என்றாலும் எதிரி சுதா என்பவர் எங்களது பகுதியை சேர்ந்தவர் என்பதால் அவரை வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியம் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியவாறு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவர் சரியானது என ஒப்புக் கொண்டதின் பேரில் 17.04.2023 அன்று சாட்சியிடம் கையொப்பம் பெறப்பட்டது.

23வது கூடுதல் மாவட்ட நீதிபதிஅவர்கள்,
23வது கூடுதல் மாவட்ட நீதிமன்றம் .
அல்லிக்குளம், சென்னை—3.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**XXIII Additional Sessions Court, City Civil Court, Chennai 104**

**Sessions Case No : 39/2021**

**Prosecution Witness : PW.19**

**Name : Sankar**

**Father Name : Papaiya**

**Village :**

**Taluk :**

**Caste :**

**Calling :**

**Religion :**

**Age :**

***( Accused along with their counsel and Public Prosecutor present)***

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the17th day of April 2023.**

---

**முதல் விசாரணை**

**நான் திருச்சி, சோமரசன்பேட்டை, எண்.5/150– வீரங்கி நல்லூர் என்ற விலாசத்தில் வசிக்கிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். நான் சோமரசன்பேட்டை பஞ்சாயத்தில் வார்டு மெம்பராக இருக்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. சாட்சி முத்தமிழ் செல்வன் எனது நண்பர் ஆவார். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவதாக போடப்பட்டுள்ள இரண்டு கையொப்பங்கள் என்னுடையது அல்ல. இவ்வழக்கின் எதிரி சுதா என்பவர் சோமரசன்பேட்டை காவல் நிலையத்தில் எனது முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம்**

எதுவும் கொடுக்கவில்லை. அதன் பெயரில் போலீசார் எவ்வித தடய கொத்தையும் கைப்பற்றவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை அனுமதி வழங்கப்பட்டது)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

கடந்த 09.06.2018 அன்று ஆஜர் எதிரி சுதா என்பவர் திருச்சி மாவட்டம் சோமரசன்பேட்டை காவல் நிலையத்தில் எனது முன்னிலையில் போலீசாரிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றாலும் அதில் நானும் சாட்சி முத்தமிழ்செல்வனும் கையொப்பம் போட்டோம் என்றால் சரியல்ல. பின்னர் எதிரி சுதா என்பவர் அவரது வீடு அமைந்துள்ள சோமரசன்பேட்டை வாசன் சிட்டி, 7வது குறுக்கு தெருவில் போலீசாரிடம் ஆஜர் படுத்திய Hero Pleasure இரு சக்கர வாகனம் மற்றும் Samsung Galaxy Mobile with Two Simcards ஆகியவற்றை மகஜரில் கைப்பற்றினார்கள் என்றாலும், அதற்கான கைப்பற்றுதல் மகஜரில் நான் கையொப்பம் போட்டேன் என்றாலும் எதிரி சுதா என்பவர் எங்களது பகுதியை சேர்ந்தவர் என்பதால் அவரை வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியம் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியவாறு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவர் சரியானது என ஒப்புக் கொண்டதின் பேரில் 17.04.2023 அன்று சாட்சியிடம் கையொப்பம் பெறப்பட்டது.

23வது கூடுதல் மாவட்ட நீதிபதிஅவர்கள்,
23வது கூடுதல் மாவட்ட நீதிமன்றம் .
அல்லிக்குளம், சென்னை–3.